**சுருக்கம்**

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று **"ஈரோடு 27 கி.மீ"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளித்து –ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை**

**அரசாணை (டி) எண். 347** 28107 **நாள். 04.09.2014**
**ஜய, ஆவணி 19,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.02, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் கடித எண்.சட்டக்குழு–4/22703/2014, நாள் 23.07.2014 தேர்வுக்குழு எண். 37/2014–2015.

-----

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. முதன்மைச் செயலர் / வணிகவரி ஆணையர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு **"ஈரோடு 27 KM"** தமிழ் திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட அனைத்து உறுப்பினர்களும் வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

3. இந்நிலையில், மேற்கண்ட இத்திரைப்படத்தின் தயாரிப்பாளர் தமது 04.08.2014–ஆம் நாளிட்ட கடிதத்தில் **"ஈரோடு 27 KM"** என்ற திரைப்படத்திற்கு **"ஈரோடு 27 KM"** (Alias) **"ஈரோடு 27 கி.மீ"** என்று மத்திய திரைப்பட தணிக்கை குழுவிடமிருந்து பெறப்பட்ட திருத்திய தணிக்கை சான்றிதழை இணைத்து மேற்கண்ட திரைப்படத்திற்கு **"ஈரோடு 27 கி.மீ"** என்ற தலைப்பில் கேளிக்கை வழங்குமாறு கோரியுள்ளார். மத்திய திரைப்பட தணிக்கை வாரியமும் **"ஈரோடு 27 KM"** என்ற திரைப்படத்தின் தலைப்பினை **"ஈரோடு 27 கி.மீ"** என மாற்றம் செய்து சான்றளித்துள்ளது.

4. மேற்கண்ட சூழ்நிலையில், **"ஈரோடு 27 KM"** என்ற தலைப்பானது **"ஈரோடு 27 கி.மீ"** என மாற்றம் செய்யப்பட்டுள்ளதாலும், அதனடிப்படையில் அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவு (சி1) துறை, நாள் 21.7.2011 வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்வதாலும், கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின், பார்வையிட்ட அனைத்து உறுப்பினர்களின் பரிந்துரையை ஏற்று, தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் பிரிவு 8, உட்பிரிவு 2ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, **"ஈரோடு 27 கி.மீ"** தமிழ் திரைப்படத்திற்கு ஆணையிடப்படும் நாள் முதல் கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

4/9/2014

பிரிவு அலுவலர்.
4/9/14